# <u>தீராஉலா</u>



---ஜெயசேகரன் ஜென்

தொகுப்பு: அனுத்தமா




#தீராஉலா : 001

ஐந்து பேர்.
ஏழு நாட்கள்.
இன்னொரு இந்தியா.
முகமூடியற்ற வாழ்வு.

பயணம் ஆரம்பம். எல்லோருக்கும் ஒரு அலைவரிசை இருக்கிறது. அந்த அலைவரிசை merge ஆகும்போது .. ஆரம்பிக்கும் புள்ளியே பயணம். புள்ளி தொடராவது இயற்கையின் கையில்.

காலையில் வழக்கமான ஆடைகளை தூக்கி எறிந்தது முதல் முகமூடி எறிதல். என்ன பிடிக்குமோ அதை அணிந்து, நினைத்த போது எழுந்து, விரும்பிய நேரத்தில் விரும்பியதை உண்டு, நகர்தலில் மலர்ந்து, நட்சத்திரங்களை எண்ணிக்கொண்டு, ஏதோ ஒரு ஆற்றுக்கு பக்கத்தில், வானம் பார்த்த இள மணலில் முதுகு சாய்த்து .. நினைக்கும் ஒவ்வொரு நினைவிலும் ... மனதுக்கு நெருக்கமானவர்கள் வந்து செல்ல .. வாழ்வுடா இது .. என்று சொல்லவைக்கும் எழுத்தை இங்கே எழுதுவதற்கு விருப்பம் சொல்ல வந்து சிரிக்கும் மனம் என்னுடன்.

கழட்டி வைத்தவை கண்ணாடிகள் மட்டும் அல்ல. போலியான நகர நரக வாழ்வின் அடையாளங்களையும் தான். எவ்வளவு காலம் தான் இந்த " நானும் நல்லவன் நல்லவள் " மனிதர்களை கவனிப்பது ? கொஞ்சம் இயல்பு மனிதர்களை காண, பேச, பழக, புகைப்படம் எடுக்க, அனுபவம் பகிர ஒரு தீரா உலா இது எனில் வியப்பில்லை.

இங்கே ஏன் பகிர வேண்டும் ? ....

#slogging ஒரு புது உலகம். அதே போல .. #இன்னொருஇந்தியா வும் தான். காட்சிகளும், மனிதர்களும், அனுபவங்களும் 10K விற்கு பயன்படும். Rajeev Adhithya சொல்லும் உலகம் ஒன்று, இங்கு இருக்கும் உலக அழகுடன் எப்படி சேர்கிறது ? என்றும் பார்ப்போம். பனை மரங்கள் இன்னொரு மாநிலத்தில் என்னவாகிப் போகின்றன என்பதுடன் .. ஓடும் ஆறுகள் எங்கே முடிகின்றன, எங்கே தொடங்குகின்றன என்று .. பகிர்வோம் என்பதும் இந்த எழுத்தின் intent.

புகைப்படங்கள் காலத்தின் சாட்சிகள். ஆக .. புகைப்படங்களும் இங்கே நம்மை தொடரும். எம் படங்களில் மனிதர்களும் இயற்கையும் உங்களுடன் பேச முயலும். அவற்றை .. அவர்களை பேச விடுங்கள். அவை சொல்பவற்றில் சில உண்மைகள் சுடும். சில .. திசை மாற்றும்.

ஆக .. பயணிப்போம். பகிர்வோம்



#தீராஉலா : 002

எவ்வளவு சொன்னாலும், என்ன அழகு எனினும், எவ்வளவு திறமை இருப்பினும் ... சிறைக்குள் இருப்பதன் பெயர் சிறையில் இருப்பது தானே !?

அழகான மீன். மௌனமாய் இருக்கிறது. ஒரே இடத்தில் நிற்கிறது. அடைக்கப்பட்ட தொட்டி வழியே, நீர் bubble உள்ளிருந்து எழுவதை இயக்கம் என நம்பச் சொல்லும் உலகை, சிரிப்பதா அழுவதா என்ற முகத்துடன் பார்க்கும் அழகிய மீன் ஏதோ ஒரு நாள் அழும் மீனாக மாறலாம் !

வாஸ்து மீன் என்று உலகம் பெயரிடுகிறது. அதன் மௌனத்தை தனக்கு ஏற்ப மாற்றிக்கொள்கிறது. ஏரியில், ஆற்றில், குளத்தில் மீன் மௌனமாக இல்லையா ? என்ற ஒரு கேள்வி உள் வரும். ஆம். மௌனமாகத் தான் இருக்கிறது. ஆனால் அது அதுவாக இருக்கிறது. அதன் மௌனம் வாஸ்து


என்று பெயரிடப்படாத வண்ணம் வாழ்கிறது. மீன் என்ற பெயரே மனிதன் இட்டது. அப்படி ஒரு பெயரும் அதற்க்கில்லை.

தொட்டிக்குள் இருக்கும் மீனை பார்த்து கடக்கிறேன். உடல் கடந்தாலும், மனம் அங்கேயே இருக்கிறது. சுதந்திரம் என்பது விடுதலைக்கு எதிர்ப்பதம் அல்ல. இயற்கையுடன் ஒருமித்த பதம். இயற்கைக்கு எதிராக நடப்பவைகளை, விடுதலை செய்கிறேன் என்று பேசும் மனிதர்கள் ஒரு வித்தியாச மாதிரிகள். அதை அப்படியே விடுங்களேன் .. என்பதே சுதந்திரம். அடைத்து விடுவிப்பது அல்ல !!

அந்த கண்ணாடியை அப்படியே உடைக்க வேண்டும். மீனை பிடித்துக்கொண்டு போய் அக்கம்பக்க அதன் உயிர்ப்பான நீர்நிலையில் விடவேண்டும். உரிமையாளன் கோபிப்பான். கோபிக்கட்டும். அவனுக்கு தேவை இன்னொரு மீன். இந்த மீன் அல்ல. அதற்கான பணம் கொடுக்கப்பட்டால் அவன் சரியாவான். ஆனால் இந்த மீனுக்கு முழு விடுதலை.

நாட்டிற்குள்ளும் எத்தனையோ மீன்கள் - மற்றவர்கள் இட்ட பெயரை சுமந்து கொண்டு ! மற்றவர்களின் வாஸ்துக்காக வாழ்ந்து கொண்டு. மற்றவர்களின் காரியத்திற்கு காரணமாக .. பேச முடியாது மௌனமாக. அந்த வீடுகளின் ஜன்னல்கள் கண்ணாடிகள். அந்த ஜன்னல் கண்ணாடிகளை உடைக்கும் தைரிய மீன்கள் இன்னும் சில காலங்களில். தனக்கு தேவையான நீரினை தெருவில் ஊற்றி, அங்கே நீச்சலிடிக்கும் மீன்களை உலகம் காணத்தான் போகிறது.

பயணிப்போம். பகிர்வோம்.






#தீராஉலா : 003

ஒரே ஒரு கண்ணாடி மட்டுமே இடையே. அகமும் புறமும் தெரிவது போல, see through ஆக இருந்தால், எல்லாமும் ரசிகத்தக்கவையே.


பயணங்களில் sunset ஒரு சங்கேத, சங்கீத மொழி. Sunset கொண்டு வரும் செவ்வண்ண அந்தி மஞ்சளுக்கு முன் தெரியும் அத்தனையும் நிழலாய் மாறுவதில் இருக்கிறது நாள் சரியும் அழகு .. அதன் மௌனம், அதற்கு அருகில் தெரியும் அத்தனையும் பெரும் அதே வண்ண பிரதிபலிப்பு.. வாழ்க்கை தான் எவ்வளவு அழகு !

Sunset சொல்லும் செய்திகளில் பல ஆச்சரியங்கள் காத்திருந்தாலும், ஒரு செய்தி ஏற்படுத்தும் ஆச்சர்யம் அதீதம். நாள் விழுகிறது. இன்று விழும்

நாள், மணி நேரத்தில், எழும். புதியதாய், oxygen நிரப்பிய புத்துணர்ச்சியுடன்.. நேற்றைய நினைவுகள் delete செய்யப்பட்டு, புது folders உடன் கண் முன் உதயமாகும். இதுவே வாழ்க்கையின் ஆச்சர்ய செய்தி.

சாளரம் வழி காட்சிகள் என்று புகைப்பட தொகுப்பு ஒன்று வெளியிடும் எண்ணம் உண்டு. சாளரம் மௌனத்தின் சாட்சியாக. சாளரக் காட்சிக்கு நான் சாட்சியாக. சூரிய அஸ்தமனம் அனைத்திற்கும் சாட்சியாக. ஆக .. ஒவ்வொன்றிற்கும் சாட்சியாக ஒன்று இருந்தே தீரும்.

பயணிப்போம். பகிர்வோம்.




#தீராஉலா : 004

தொலைந்து போன நகரம். தொலைவில் புள்ளிகளாய் வாகனங்கள். புள்ளிகளாய் கூட தெரியாத மனிதர்கள். எல்லைகள் சொல்லும் உயரத்தை குறிக்கும் மரங்கள். பரபரப்பற்ற வானம். மீட்டா வீணை போல் இல்லாத மேகம்.

தன் அளவிற்கு அலை பரப்பும் நீர்நிலை, அலை ஏற்படுத்தும் சத்தத்தில் அடங்கிப்போகிறது. யாருமற்ற அந்த வெளியில், நிறத்தை மட்டும் பிரதிபலித்துக்கொண்டு .. ஒரு எல்லைக்குள் தன்னை அமைதியாக வைத்திருக்கும் நிலையின் அர்த்தம் தான் என்ன ? செதுக்கப்படா எல்லைகள் கொண்ட ஏரியும் அழகே. செதுக்கப்பட்ட நீச்சல் குளங்களும் அழகே. ஆனாலும் ... ஏரி பேசும் மௌனப் பேச்சினை நீச்சல் குளங்கள் பேசுவதில்லை.

நிலம் முடியும்போது நீர் ஆரம்பம். நீர் முடியும்போது நிலம் ஆரம்பம். ஒன்றின் முடிவில் ஒன்று ஆரம்பமாவது இயல்பு. ஆக முடிவென்று ஒன்று கிடையவே கிடையாது. முடிவு என்பது வரும்போதெல்லாம், கிடைக்கும் நிர்வாண நிலை ஏற்படுத்தும் ஆரம்பம் என்று ஒன்று .. உடலை புவி ஈர்ப்பு விசைக்கு எதிராக எழுப்பும். அங்கே இருக்கிறது புது வாழ்க்கை !

Machines நம்மை புரிந்து கொள்ளும் அளவிற்கு நாம் அவற்றை புரிகிறோமா என்று தெரியவில்லை. எங்கு சென்றாலும் வருகிறது.

எல்லைக்கு வெளியே நிற்கிறது. மீண்டும் நாம் வந்ததும், வேறு மகிழ் நிலை நோக்கி நம்மை நகர்த்துகிறது. மீண்டும் விலகிக்கொள்கிறது. வாசலுக்கு வெளியே புரிந்து நிற்கும் உறவை என்னவென்பது ? புரிந்து கொள்ள முயற்சிக்காத ஆனால் வீட்டுக்குள் வாழும் உறவை என்னவென்பது ? இதில் ஒன்று மனிதன் என்றும், இன்னொன்று machine என்றும் அழைக்கப்படுகிறது. ஆச்சர்யம் !!

அந்த கரையின் எல்லையில் என்னை தொலைத்து, என்னை மீண்டும் பெரும் மகிழ் கணம் எல்லோருக்கும் நடக்கட்டும். அக்கம்பக்க ஏரி .. அநேகமாக ஒரு போதி நீரின் நிலையாக இருக்க கூடும்.

பயணிப்போம். பகிர்வோம்.





#தீராஉலா : 005

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கதை, நிலை, பார்வை, முடிவு, ஆரம்பம், தொடர்ச்சி மற்றும் கனவு. காண்பவைகளில் கற்பதை கண்ணுக்குள் நுழைத்து கொள்வதும், கண்ணுக்குள் நுழைந்ததை மனதிற்குள் பாடமாய் எடுத்துக்கொள்ளும் நோக்கம் இருக்கும் வரை வாழ்வில் பயம் எதற்கு ?

விவேகானந்தர் சொல்லியதில் பல விடயங்கள் இருக்கின்றன. ஆனால் அதில் முக்கிய ஒன்று .. " நீ இருக்கும் வரை இறப்பு வருவதில்லை. இறப்பு வரும்போது நீ இருக்க போவதில்லை. பின் ஏன் பயம் ? ". ஆம். மனதிற்குள் பயம் அற்று நிற்கும் வாழ்வில் கற்றலும், கேட்டலும், உணர்தலும், reframe செய்தலும் ..சூத்திரங்கள் ஆகிப்போகும்.

நீண்ட தூர பயணங்கள் வாழ்வின் மாற்றப்புள்ளிகள். அவை ஏற்படுத்தும் நம்பிக்கை அதிர்வுகள் இலக்குகளை செழுமையாக்கும். இலக்குகள் நடத்தும் பாடங்கள் அடுத்த நிலை புரிதலை கொடுக்க, முற்றுப்புள்ளி அற்ற வானத்தை தூர இலக்காக கொண்டு, செல்லும் drive .. யதார்த்த வாழ்வுக்கு இன்னொரு பரிமாணம்.






#தீராஉலா : 006

அடாது மழை பெய்தாலும் ..

ஒரு நீண்ட பயணம். 500 Kms. இன்னும் தொடர்கிறது. ஆனாலும் 10 K மீண்டும்.

குளிர் நிறைந்த தட்பவெப்பநிலை. நிறுத்தி நிறுத்தி பயணிக்கும் காற்று. சற்று தள்ளி, யாரையோ சந்திக்க.. வேகமாய் பயணிக்கும் வாகனங்கள். இருள் வானம். நம்பிக்கை நட்சத்திரம். காணாது போன நிலா. ஆட்கள் தொலைந்து போன சாலை.

#slogging இல் ஒரு சிறப்பு என்னவெனில் .. மேற்சொன்ன அனைத்தையும் ரசித்து பயணிக்க முடியும். சட்டென குறுக்கே ஓடும் எலியும், அதை வேடிக்கை பார்க்கும் நாயும், இரண்டையும் பார்த்து அர்த்தம் புரியாமல் சிரிக்கும் குழந்தையும், அதை பார்த்து அர்த்தம் புரிந்து சிரிக்கும் தந்தையும் .. வாழ்க்கை தான் எவ்வளவு அழகானது.

#10K slogging இல் ஒரு சில விஷயங்களை கவனிக்க முடியும்.

# 10 - 13 நிமிடத்தில் வியர்த்து விடும்.


# 4000 - 6000 தொடும்போது, இன்னும் எவ்வளவு என்று பார்க்க தோன்றும். ஆனால் 6000 - 8000 தொடும்போது, 12 தொட்டால் என்ன என்று தோன்றும்.

# 10000 முடித்தவுடன் ஒரு நிறைவு. நீருக்குள் விழுந்த கூழாங்கற்கள் மொத்த மௌனத்தையும் குத்தகைக்கு எடுப்பதுபோல ... மூச்சு அமைதியாகி, மௌனத்துடன் சம்பந்தம் பேசி சிரிக்கும்.

# 10000 முடித்தவுடன் நடக்கும் ஓர் கடைசி நடை இருக்கிறதே .. அது தான் ஆச்சர்ய நடை. இன்று செய்ய வேண்டியதை செய்து முடித்த நிறைவு. கொஞ்சம் மகிழ்வும், " முடிச்சாச்சு முடிச்சாச்சு " என்று மனதிற்குள் ஒரு சிரிப்பு குரலும் கேட்டுக்கொண்டே இருக்கும்.

என்ன ? #10000slogging வசீகரிக்கும் இயக்கம் தானா ?

பயணிப்போம். பகிர்வோம்.




#தீராஉலா : 007

When you are single, everything else is an addition :

உடனே Single க்கு நிறைய அர்த்தம் எடுக்க தோன்றும் மனிதர்களுக்கு **வாழ்த்துக்கள்**. ஆனால் இங்கு நிலை வேறு. ஒரு car இருக்கும்போது, அதனுடன் சேரும் அனைத்தும், addition தான். நீளும் கரை, தாங்கும் ஏரி, horizontal நீர், வளர் புற்கள், ஒரு Camera, ஒரு புகைப்பட ரசிகன் .. அத்தனையும் addition தானே ?

மொத்த புல்வெளியில் நிற்கும் ஒற்றை மரம் மீதம் அனைத்தையும் பார்வையில் இருந்து ஒதுக்கி, தனியாக, கம்பீரமாக, சொல்ல வந்த செய்தியை மனதிற்குள் வைத்தாற்போல நிற்கிறது. வயல்களுக்கு மத்தியில் இருக்கும் பெரிய ஒற்றை வாய்க்கால் எல்லாவற்றையும் பின்னுக்கு இழுக்கிறது. மலைத்தொடர்களுக்கு மத்தியில் இருக்கும் ஒற்றை நீர்வீழ்ச்சி மனதை கவர்கிறது. ஒற்றைகள் பேசுவதில்லை. ஆனால் ஈர்க்கின்றன.

உணவு விடுதிக்கு சென்றால், ஒற்றைக்கு உடனே இடம் கிடைக்கிறது. Theatre க்கு சென்றாலும். பேருந்தில் இடம் கிடைக்கும்போதும். ஒரே ஒரு ஆடை .. எளிதாக எடுக்க முடிகிறது. ஒருவர் மட்டுமே ஆன bike ride அழகாக இருக்கிறது. ஒருவர் வாசிக்கும் புல்லாங்குழல், ஒருவர் பேசும் பேச்சு,


ஒருவரின் மௌனம், ஒருவரின் நடை, ஒருவரின் பார்வை, ஒருவரின் உதவி ... ஒற்றைகள் தான் எவ்வளவு எளிமையான வலியவர்கள் !

ஒரே ஒருவர் வாழ்ந்த கிராமம் ஒன்று இருந்தது. அங்கே பணம் இல்லை. பொருள் ஈட்டல் சிந்தனை இல்லை. குடும்பம் இல்லை. சேமிப்பு இல்லை. செலவும் இல்லை. பிரச்சினை இல்லை. பஞ்சாயத்து இல்லை. புறம் பேசுதல் இல்லை. குற்றம் சொல்லல் இல்லை. அந்த கிராமம் முழுக்க இதெல்லாம் இல்லை என்றாலும் ஒன்றே ஒன்று இருந்தது. அதற்கு பெயர் அமைதி !

ஒற்றையாய் வாழ முடியாதவை, கூட்டம் பற்றி பெருமை பேசுகின்றன. கூட்டத்தோடு ஒத்து போக முடியாதவை, ஒற்றையை ஏக்கமாய் பார்க்கின்றன. கூட்டத்தில் நன்மை உண்டெனில் ஒற்றையிலும் உண்டு. ஒற்றையில் தீமை உண்டெனில் கூட்டத்திலும் உண்டு. அவ்வளவே.

ஒரே ஒரு ஏரி. ஒரே ஒரு car. ஒரே ஒரு மனிதன். ஒரே ஒரு நில வெளி. ஒரே ஒரு காட்சி. ஒரே ஒரு பதிவு. ஒற்றைக்கும் ஒரு பக்கம் இருக்கட்டும். Single என்பது வழியற்ற வாழ்வு அல்ல. Single என்பதே வழி ஏற்படுத்தும் வாழ்வே - இலக்குகளில் தெளிவாக இருப்பின் !!

பயணிப்போம். பகிர்வோம்.






#தீரா உலா : 008

அதிகாலை. Anuthama Radhakrishnan விடம் இருந்து ஒரு செய்தி. " நீங்கள் இருக்கும் இடமும் Biren இருக்கும் இடமும் ஒன்றே ". உடனடியாக Biren Brahmbhatt & Purvi Brahmbhatt க்கு தொலைபேசியில் connect செய்ய முயல்கிறேன். Response இல்லை. அமைதியாக இருக்கிறேன். சிறிது நேரத்தில் response. எங்கே இருக்கிறார்கள் என்று தெரிந்து, என் நண்பர் அவரை காண வருவதாக சொல்லி, ஒரு 40 நிமிடத்தில் அவர்கள் இருக்கும் இடம் அடைந்து விட்டேன். என் உடன் வந்த நட்புக்கள் அவர்களிடம் நேரடியாக பேசிக்கொண்டிருக்க, நான் சென்னையில் இருப்பது போல பேசிக்கொண்டிருக்க .. ( just ஒரு நிமிட இடைவெளியில் இருந்துகொண்டு .. ) .. சட்டென, அவர்கள் இருக்கும் இடத்திற்கு உள்ளே நுழைந்து, அவர்களின் முன் சிரிக்க .. ஒரு மகிழ்ச்சி மத்தாப்பு உள்ளிருந்து பற்றி, வெளியே சிரிக்க தொடங்கியது.

SOW - Soul Of a Wanderer - நான் எழுதிய போது Biren இன் புகைப்படங்களை சேர்க்க நினைத்தேன். பலர் என்னை என் படங்களை மட்டும் சேர்க்குமாறு சொல்லிய போதும், அந்த திறமைக்கு ஒரு platform இருக்க வேண்டும் என்று நினைத்து அவரின் படங்களை என் எழுத்துக்களுக்கு அணிவித்தேன். ( அதே எழுத்துக்களுக்கு என்னிடம் படங்கள் உள்ள போதும் ! ). இனி SOW எப்போதும் ஒரு வரலாறு. நட்பு என்றால் எப்படி இருக்கலாம் என்பதன் benchmark என்றும் SOW புகைப்படங்களை சொல்லலாம்.

10 வருடங்களுக்கு முன், அகமதாபத்தில் ஒரு பயிற்சி வகுப்பில் Purvi யை சந்தித்தேன். பயிற்சி வகுப்பிற்கு பின் சில நாட்கள் கழித்து, என்னை சந்திக்க வேண்டும் என்று அழைத்த ஒரு அழைப்பு 10 வருடங்களாக தொடர்கிறது. Biren னும் நானும் இன்றும் நிறைய பேசிக்கொள்கிறோம் சந்திக்காமலே - புகைப்படங்கள் மூலமாக. Purvi தான் இதன் ஆரம்ப புள்ளி.

Gujarat பயணங்களில் Biren மற்றும் Purvi யின் பங்களிப்பு அதிகம். எல்லைகளில் பயணித்த போது Biren கொடுக்கும் தகவல்கள் செவிக்கு இனியவை. வாழ்க்கை யாரையோ உடன் அனுப்பி, ஏதோதோ தகவல்களை சொல்லிக்கொண்டே இருக்கிறது. புரிந்தவர்கள் நட்புக்கள். புரியாதவர்கள் மின்னி மறைந்த நட்புக்கள்.

பயணிப்போம். பகிர்வோம்.




#தீராஉலா : 009

சட்டென உருவானது அந்த team. எல்லோரும் வரலாம் என்று பேச, வருகிறோம் என்று இந்த team கிளம்பியது. அதற்கு என்று எழுதப்பட்டதை அது அனுபவிக்கிறது. முழுமையாக அழகாக நிறைவாக. அவர்களுடன் நானும்.

தனியாக வந்திருக்கலாம். ஒரு தனி drive செய்திருக்கலாம். எனக்கு பிடித்த AC அளவு, எனக்கு பிடித்த பாடல், எனக்கு மட்டுமே என எழுதப்பட்ட இருக்கை, எனக்கு தேவைப்படும் இடங்களில் இருக்கும் நிறுத்தம், எனக்கான தேநீர் நிலையங்கள், உணவகம், புத்தகம் ... எல்லாம் எனக்கு கிடைத்திருக்கலாம். இன்னும் எத்தனையோ " லாம் ". ஆனாலும் ...

அலைவரிசையில் சட்டென இணையும் மூவர் இணைய, ஒரு பயணம் ஆரம்பித்தது. மூன்று ஆண்கள், ஒரு பெண் .. மொத்தம் நால்வர். இரு பாலர் பயணம் செய்ய இயலுமா ? முடியும். அவரவரின் எல்லையை அவரவர் உணர்ந்தால். அப்படி உணரும் மனிதர்களால் மட்டுமே ஒருவாறு பயணிக்க முடியும். மற்றவர்களால் ? ... பயணம் முடிவதற்குள் மன வருத்தங்கள் தொடங்கி மனம் காணாமல் போகும்.

Indira Prabhakaran - ஒரு female excellence .. கற்பதை வெளிப்படையாக சொல்வதில்லை. ஆனாலும் கற்பதை நிறுத்த முனைவதில்லை. மனிதர்கள் மாறுபவர்கள் என்கிற பாலபாடத்தில் இருந்து இயங்குகிறது அவர்களின் ஆத்ம உலகம்.

Karpagaraajen Thiyagarajan - நகைச்சுவையுடன் உலகம் படிக்கும் மனிதர். நாள் முழுக்க சிரிக்க வேண்டும், ஆனாலும் கற்க வேண்டும் எனில்.. கற்பகா வுடன் இணைந்து பயணிக்கலாம்.


Rathinavelu Muthusubramanian - எப்போதும் அதிர்வுகளை balance செய்ய ஒரு shock absorber தேவைப்படும் நம் பயணத்தில். அப்படித்தான் நிற்கிறார் முத்து. வானம் வரை மௌனமும், நட்சத்திரம் கேட்கும் internal dialogue ம் என்று அவரின் உலகம் ஆச்சர்யம்.

அனைத்து புகைப்படங்களையும் கவனித்தால் ஒன்று புரியும் ( அனைத்தையும் கவனிக்கவும் ! ) . மகிழ்ச்சியை வெளியே தேடாமல், அகத்தில் அணையாய் நிறுத்தி.. முகம் சிரிக்க தெரியும் புகைப்படங்கள் ... சொல்லும் அவர்களின் ஆழ் மன மகிழ் பிம்பங்கள்.

குடும்ப உறவுகள் சொன்னால் புரிந்துகொள்பவை. பெயரில்லா நட்புக்கள் சொல்லாமல் புரிந்து கொள்பவை. ஆனால் காலம் முழுக்க உடன் பயணிக்கும் நட்புக்கள் ... ? .. இதையெல்லாம் யோசிக்க அவர்களுக்கு நேரமில்லை. அந்த நேரத்தில் அவர்கள் அடுத்த பயணம் பற்றி யோசிப்பார்கள். இடங்களை கண்களால் உண்ண ஆரம்பிப்பார்கள்.

சரி. December இல் வரும் Gujarat பயணம் பற்றி யோசிக்கிறோம். பேசிக்கொண்டு இருக்கிறோம்.

அப்போ நீங்க ?




#தீராஉலா : 010

உயரமான மலையின் மேல், தட்டையான பகுதி. சரியாக வாக்கெடுத்தது போல தார்ச்சாலை, நீல நீள் மௌன வான்வெளி, தொலைந்த நட்சத்திரங்கள் எட்டிப்பார்க்க காத்திருக்கும் நேரச் சரிவு, சரிவில் மறையும் சூரியன் அனுப்பும் செவ்வண்ண செய்தி, அதை படிக்கும் உயர வளரும் புல்வெளி, தோள் சாய இடம் கொடுக்கும் Car, அவை அனைத்தையும் படம்பிடிக்கும் நட்பின் ரசனை .... #என்னதவம்செய்தனை !

Honda ஒரு முறை நினைத்த வரி .. Power Of Dreams தான் அந்த நிறுவனத்தின் caption ஆக மாறியது. நினைத்தால் நடக்கும் என்பது, நிரூபிக்க முடியா ஆனால் உயிர் உள்ள விடயம். விபத்து நடந்த அதே இடத்துக்கு மீண்டும் வருவேன் என்று மனதிற்குள் சொல்லிக்கொண்ட நாள் இன்று நினைவில். Honda என்னுடன் பயணிப்பது ஒரு நம்பிக்கை coincidence. நினைத்தால் நடக்கும் எனில், மனிதம் என்றும் சிறப்பாக வாழ யோசிப்பதில் மட்டுமே எம் உயிர் வாழும்.

அமர்ந்து இருக்கும்போது .. மனதிற்குள் தோன்றிய ஒரு எண்ணம் நீருக்குள் இருந்து வெளிவருவது போல ... வெளிவந்து மூச்சில் கலந்தது.


" முடிந்தவரை எண்ணங்களை சீர் செய். பின் பிறரின் எண்ணங்களை சீர் செய்ய அவர்கள் கேட்டால், விரும்பினால் உதவி செய். ஆனாலும் ..

பயணித்துக்கொண்டே இரு. எங்கும் நிற்காதே. பாடம் கற்றுக்கொள். முன்னேறு ".

அந்த மொத்த புல்வெளியும் அதை ஆமோதித்தது. மறையும் சூரியனும் சரி என்று மறைந்தது. காற்று வருடிக்கொண்டே வளர்ந்தது. ஏதுமற்ற வெளியில், யாதுமாகி நிற்பதை, ரசிக்கும் மூச்சு உள்ள உயிர் என்னுள் சொன்னது ..

" வாழ்க்கை மிக அழகானது "

என்ன தோன்றுகிறது உங்களுக்கு ?




#தீராஉலா : 011

வாழ்வின் கணங்கள் எல்லாம் மீண்டும் வராதவை. ஒருமுறை. ஒருமுறை மட்டுமே. இல்லை எனில் இல்லை. அவ்வளவே. ஒன்று ரசி. அல்லது விலகு. நிகழ்காலத்தில் இருந்து கொண்டு, கடந்த காலத்தை நினைத்து வருந்தி, எதிர்காலம் பற்றி பயந்து ... வாழவும் முடியாமல், வீழவும் முடியாமல், வாழ்வது என்பது ஒரு வாழ்க்கையா என்ன ?

நான்கு மனிதர்கள். நால்வரின் வாழ்க்கை நதி பயணித்த பகுதிகள் வேறு. அறிமுகம் அற்ற அவர்கள் சந்திக்கும் வேலையில் உருவாகும் அலைவரிசை ஒன்று ஒரே புள்ளியில் அவர்களை யோசிக்க வைக்கிறது. நால்வருக்குள்ளும் எந்த பந்தமும் இல்லை. இருக்கப்போவதும் இல்லை. ஆம். இருக்கப்போவதில்லை. அந்த கட்டப்படாத கயிற்றில் இணைந்து நிற்பதே அவர்களின் புரிதல். அவரவர்க்கு அவரவர் வாழ்க்கை. அவரவரின் நதியில் அவரவரின் ஓடங்கள். நதியை அவர்கள் நினைத்தவாறு இயக்கும் வல்லமை பெற்ற உயிர்மையின் உரிமை அவர்களிடம்.

கூர் தீட்ட தேவை ஆயுதம் மட்டும் அல்ல. ஆர்ப்பரிக்கா மனமும், ஆழ்நிலை தியானத்தில் இருக்கும் பார்வையும். உலகம் எறியும் கற்கள் உடலில் விழும்போது, தடுக்க தேவையான கேடயம் ஆயுதம். ஆனால் அதற்கு பின் இருக்கும் மனம் தான் அந்த கேடயத்தின் நிஜ பலம். அந்த மனதின் அதிர்வலை இல்லாத நீர்ப்பரப்பு சொல்லும் கதைகள் உண்மைகள். " இதுவே நான் - முடிந்தால் ஒத்துக்கொள் அல்லது விலகி

நில் " என்று சொல்லும் பதில் அந்த கற்களுக்கு. எறிந்தவர்கள் பிடித்துக்கொள்ள வேண்டி வரும் அவர்கள் எறிந்த அனைத்து கற்களையும். கொஞ்சம் வலிக்கவே செய்யும் அவர்களுக்கு. என்ன செய்வது... ? எறிந்தது அவர்களே !. அவர்களின் கல் அவர்களுக்கே !!

எல்லைகளை அழித்துவிட்டு ஏற்படுத்தும் நிலப்பரப்பில், நான்கு புள்ளிகள் அசையும் கோலங்களை இடுகின்றன. ஒவ்வொரு பார்வையில் இருந்தும் கோலங்கள் மாறும். ஒவ்வொரு முறையும் மாறும். ஒவ்வொரு கணமும் மாறும். இந்த கோலங்கள் விளக்கங்கள் அற்றவை. இவற்றுக்கு விளக்கங்கள் சொல்ல, கண்டுபிடிக்க, எழுத, உலகம் முயற்சிக்கும். அதுதான் உலகம். உலகத்திற்கு define - விளக்கம் கொடுக்கப்பட வேண்டும். விவாதம் செய்ய வேண்டும். ஒரு முடிவு தெரிய வேண்டும். ஆனால் நான்கு புள்ளிகள் அசைவால் ஏற்படும் கோலங்கள் அப்படி அல்ல. அவை இலக்கை நோக்கி பாயும் சத்தம் அற்ற தோட்டாக்கள். யாருக்கும் வலியற்று நிகழும் அந்த பயணத்தில், ஆறுகள் வேர்களை மகிழ்விக்குமே தவிர .. வேறு ஒன்றும் செய்யாது. அந்த ஆறுகள் பயணிக்கட்டும். அந்த ஆறுகளை செலுத்தும் ஆளுமைகளின் தீர்க்கமான பார்வைகளோடு !!







#தீராஉலா : 012

புகைப்படங்கள் உறைந்து கிடக்கும் வரலாற்று நிகழ்வுகள். இன்னும் 20 வருடங்களுக்கு பின் இந்த புல்வெளிகள், சாலைகள் இருக்குமா என்று தெரியாது. ஆனால் .. புகைப்படங்கள் இருக்கும்.

NLP பயிற்சியாளராக, நாடோடியாக, புகைப்பட கற்றனாக, புத்தகங்கள் படிப்பவனாக, மனதிற்குள் வருவதை எழுதுபவனாக, #slogging தினம் செய்ய முயலும் மனிதனாக ...( இன்னும் சில இருக்கின்றன ... ) அத்தனை பரிணாமங்கள் இருந்தபோதும், நான் தொடர்ச்சியாக இழப்பது புகைப்பட கற்றனை த்தான். Mobile கொஞ்சம் புகைப்பட பசியை தீர்த்தாலும், Canon இல் எடுப்பது ஒரு தனி சுகம். Canon ஐ கையில் எடுத்துக்கொண்டு, மனதில் தோன்றும் காட்சிகளை Frame ற்குள் கொண்டுவர முயற்சிக்கும் கணம் போல ஒரு சுக அனுபவம் இந்த உலகில் இல்லை.

Technical ஆக நான் அதிகம் கவனம் செலுத்துவதில்லை. புகைப்படம் எடுப்பதில் magic செய்ய நான் விரும்புவதில்லை. இருப்பதை கண்களுக்கு அளிப்பதையே விரும்புகிறேன். ஒரு புகைப்பட கலைஞனாக நான் இருந்திருக்கும் பட்சத்தில், lighting எல்லாம் சரியாக செய்து புகைப்படம் எடுக்க முடியும். அதாவது ஒரே ஒரு புகைப்படம் எடுக்க, நான் அநேகமாய் ஒரு நாள் செலவழித்திருக்க கூடும். ஆனால் இப்போதைய வாழ்வில் ஆங்காங்கே கிடைக்கும் நேரங்களில் புகைப்படம் எடுக்கும் கற்றல் மனிதனாகவே இருக்க முடிகிறது.

ஒருமுறை .... ஒரு வயதான மூதாட்டியை நான் எடுத்த புகைப்படம் ஒன்று, என் எழுத்துக்களுடன் சேர்த்து FB யில் பகிரப்பட, அநாதையாக விடப்பட்ட அவரை அவரின் மகன்களுடன் இணைத்ததை .. நிச்சயமாக என் புகைப்பட, எழுத்து திறமையின் சான்றாக சொல்ல முடியும். அதேபோல Turtuk கில் ( இந்திய பாகிஸ்தான் எல்லையின் கடைசி கிராமம் ! ) எடுத்த

மாலை நிலா புகைப்படம் என் வாழ்வின் மிக முக்கிய படம். இதுபோல பல படங்களை குறிப்பிட முடியும். ஆனால் ...இவை அனைத்தையும் கடந்து இப்போது 10K வில் உறுப்பினர்கள் பகிரும் புகைப்படங்கள் பார்க்கும் போது சொல்ல முடிந்த, சொல்ல முடியா மகிழ்ச்சி.

புகைப்படங்கள் என் குழந்தைகள். ஒவ்வொரு முறையும் புகைப்படங்களை நான் பகிரும்போது ஏதோ ஒரு குழந்தையை நான் யாருக்கோ கொடுப்பது போல இருக்கும். ஆனால் அதே நான் .. அந்த புகைப்படங்கள் ஏற்படுத்தும் அதிர்வுகளை காணும்போது, அவை " ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் .. கணங்கள் " என்று அழகாக மாறுகின்றன. புகைப்பட கலைஞன் தான் நினைத்த புகைப்படத்தை எடுத்து முடிக்கும்போது .. ஊறும் எச்சில் சொல்லும் அந்த புகைப்படத்தின் வரலாற்றினை !

மகிழ்கிறேன் உங்களின் புகைப்படங்களை காணும்போது. அனைவருக்கும் **வாழ்த்துக்கள்**.




#தீராஉலா : 013

இது என்னுடைய trademark shot. அந்த car இன் கதவுகள் இறக்கைகளாக மாறும் தருணத்தில், அவை திறக்கப்பட / அவிழ்க்கப்பட / சுதந்திரமாக / இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறது என் பார்வை.

எண்ணங்கள் அப்படியே. அவை இறக்கைகள். மூடப்பட்டு இருந்தால் மனம் பறக்காது. திறந்து இருந்தால் மனம் பறக்கும். எண்ணங்களுக்கு விடுதலை கொடுக்காமல் உயரம் செல்ல நினைக்கும் மனம் தரையில் இருப்பதுவே இயல்பு. நிஜம்.

ஒருமுறை என்னிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது.

" என்னால் முடியுமா என்று தெரியவில்லை. அப்படி நான் நம்ப என்ன செய்ய வேண்டும் ? ".

" உங்களால் முடியாது என்று எது உங்களை நம்ப வைக்கிறது " என் பதில் கேள்வி.

சிறிது நேரம் அமைதியாக இருந்த பின் சொன்னார்...

" அதுவும் தெரியவில்லை "

" தெரியாத ஏதோ ஒன்று "முடியாது" என்று நம்ப வைக்கும்போது அதே தெரியாத ஒன்று " முடியும் " என்று ஏன் நம்ப வைக்க மறுக்கிறது ? "

மீண்டும் என் கேள்வி.

அவர் அமைதியாக இருந்தார்.

பின் சிரித்து கொண்டே சொன்னேன்.

" அது அப்படி இருக்க வாய்ப்பில்லை. வெளி உலகத்தில் இருந்து நம்பிக்கை பெறுபவர்கள் இப்படி அடிக்கடி முடியாது என்று சொல்லும் வாய்ப்புண்டு. தன் உலகத்தில் இருந்து நம்பிக்கை பெறுபவர்கள் எப்போதும் " முடியும் "என்று சொல்லும் வாய்ப்பை பெறுவர். மலை யாரையும் நம்பி நிற்கவில்லை. அது அதன் பலத்தை நம்பி நிற்கிறது. யாரோ எங்கோ இடித்தால் மலைகள் சாய்ந்து விடுவதில்லை "

அவரும் சிரித்தார். " மிக்க நன்றி " என்று சொன்னார்.

தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி .. என்று வரும் குறள் இனி ... தெய்வத்தால் ஆகாது எனினும் எண்ணம் .. என்று மாற்றி சொல்லப்படலாம் .

எண்ணம் இருபக்க போர் வாள். தேவைப்படும் போது வெட்டலாம், தேவை இல்லை எனில் உறைக்குள் வைக்கலாம். தேவைப்படும்போது எடுத்து சீற்றத்தை காட்டலாம். தேவை இல்லை எனில் உறைக்குள் வைக்கலாம். ஆனால் ஒன்று நிச்சயம். அதன் கடைசி புகலிடம் உறை தான். அங்கே இருந்தால் மட்டுமே அதற்கு அழகு. உறையில் இருக்கும் வாட்கள் யாரையும் வெட்டுவதில்லை. ஆனால் .. அவை உறையில் இருந்து எப்போதும் வெளிவரலாம் என்ற பயத்தை மற்றவருக்கு ஏற்படுத்திக்கொண்டே இருக்கும்.

மேலே இறக்கை என்றீர்கள், இங்கே வாள் என்கிறீர்கள் ? ஒன்று திறக்கப்பட வேண்டும் என்கிறீர்கள் ? இன்னொன்று மூடப்பட வேண்டும் என்கிறீர்கள் ? ஆம். நான் தெளிவாகவே சொல்கிறேன். தேவைப்படும் இடங்களில் சிறகுகள் விரியட்டும். தேவைப்படும் இடங்களில் உறைக்குள் அடங்கட்டும். ஆனால் இரு நிலைகளிலும் .. தனி மனித வளர்ச்சி மட்டுமே நிரந்தர பதிலாக இருக்கட்டும்.

பயணிப்போம். பகிர்வோம்.



#தீராஉலா : 014

ஒரு மூன்று பேர். முன்பின் தெரியாதவர்கள். என்ன நடந்திருக்கும்? கொஞ்சம் அறிமுகம். கொஞ்சம் பழக்கம். கொஞ்சம் Hai கொஞ்சம் Bye. அவ்வளவே. மீண்டும் சந்தித்தால் ஒரு hai and bye. அதற்கு மேல் என்றால், அநேகமாக ஒரு cinema, ஒரு partying ... கொஞ்சம் பிதற்றல், கொஞ்சம் உளறல், கொஞ்சம் கோபம், மன வருத்தம் .. என்று வாழ்க்கை கடக்கும். அதற்கு மேல் கொஞ்சம் புறம் பேசுதலும் நடக்கும்.

ஆனால் ... இந்த மூவர் அப்படி அல்ல. அவர்களுக்குள் கேள்விகள், பதில்கள், வாக்குவாதங்கள், காரணங்கள் கண்டறிதல், சொல்லுதல், கேட்டல், பெரியவன், சிறியவன், அகம்பாவம், புறம் பகிர்தல் என்று எதுவும் இல்லை. ( அப்படி நடக்கும்போது இந்த இணைதல் மறையும் !. நிறைய இணைதல்கள் அப்படி மறைந்தவையே !! ). இவர்கள் கேள்விகளை வானம் நோக்கி எறிந்து, தேவையான பதில்களை மட்டும் எடுத்துக்கொண்டு பயணிக்கின்றனர்.

பயணம் இவர்களின் பலம். உள்ளுணர்வு சொன்னவுடன் கேட்டு இணைந்ததில் பயணம் இனியதாக மாறுவது என்ன வியப்பு ? Flexibility decides the fate of a journey என்று நான் ஒருமுறை எழுதினேன். அந்த flexibilty

தான் இவர்களின் பலம். படகு அடித்து செல்லப்படும் வழியே பயணம் என்பதில் அவர்களுக்கு இருக்கும் தெளிவு தான் அவர்களின் அசுர அறிவு !

ஒரு மெல்லிய இழை அளவு இடைவெளியில் இருக்கிறது அவர்களின் நாகரிகம். மூவரும் அவரவர் பாதைகளில் பயணம் மேற்கொள்வதில் இருக்கும் தெளிவால், ஒருவரின் எல்லையை இன்னொருவர் தொட விரும்புவதில்லை. என் பயணங்களில் பல team களுடன் பயணித்து இருக்கிறேன். ஆனால் இது ஒரு வித்தியாசமான team. சிரிப்பும், சிந்தனையும், flexibility யும், யதார்த்தமும் கலந்த ஒரு team இது. அப்படியே இருக்கட்டும். அப்படியே இருக்கும் வரை .. இந்த புரிதல் தொடரும்.

அடுத்த பயணம் December இல். இணைய விரும்புவர்களுக்கு இவர்கள் முன்மாதிரி. இவர்களிடம் பேசிக்கொண்டு பயணத்திற்கு தயாராகலாம். ஆம். விரும்பினால்.

பயணிப்போம். பகிர்வோம்.

இந்த எழுத்து அவர்களுக்கும், என்னுடன் பயணிக்க இருக்கும் மற்றவர்களுக்கும் சமர்ப்பணம்.

Rathinavelu Muthusubramanian
Indira Prabhakaran
Karpagaraajen Thiyagarajan


நில். கவனி. ரசி. உணர். தெளிவுறு. முன்னேறு.


வாழ்வின் ஆதாரங்கள் ஒதுங்கி நிற்க, பயன்பெறுபவை 100இல் பறக்கின்றன.


வெறும் தார்ச்சாலையில் மட்டும் அல்ல உலகம்.

#தீராஉலா : 015.

சாலையின் ஓரத்தில் இருக்கிறது அந்த உலகம். அமைதியாக. அழகாக. உறுதியாக. மேகங்கள் வீசும் வலையில் சிக்காத மிச்சம் மீதி மட்டும் வானமாக, சிக்கியவை மறைந்த வானமாக நீலக் குடை போர்த்தி நிற்கிறது. பாதுகாப்பு இருக்கும்போது மகிழ்வாக நிற்கும் குழந்தை போல, பச்சை மரங்கள் பவ்யமாக சிரிக்க .. இயற்கையின் Fashion Designer கொஞ்சம் யோசித்து அளிக்கும் contrasting சோளக்கருதுகளின் வண்ணம் காற்றில் அசைந்து ஏற்படுத்தும் Catwalk காணாதவர்... bar யிலும், pub யிலும் மூழ்கி காணும் உயிரற்ற உலகமே உலகம் என்று வாழ்ந்து மறைவதுண்டு.

வாகனத்தின் வேக இலக்கு 100. கண்ணாடி வழி தெரியும் குறு உலகமே உலகம் என்று, பாடல் கேட்டு, மகிழும் மனம், குரலற்ற அண்டத்தின் இசையில் விழுந்து கிடக்கும், சாலை ஓர நிலங்களை காண்பதை விரும்புவதில்லை. கொஞ்சம் நின்றால் தான் என்ன ? என்று ஏளனமாக சிரிக்கும் மரங்களை நின்று கவனிக்க விரும்புவதில்லை. பிரம்மன் ஒருவன் வந்து வரைந்த வரப்பு ஓவியம், பிரிவுகளை அழகாக்க, காற்று ஏற்படுத்தும் அதிர்வில் சோளக்கருதுகள் வரப்பு தாண்டி தங்களை இணைத்து கொள்கின்றன. யார் கவனிப்பது இதை எல்லாம் ?

நில். கவனி. ரசி. உணர். தெளிவுறு. முன்னேறு.

இந்த வார்த்தைகளில் காத்திருக்கிறது புது உலகம் !!




#தீராஉலா : 016

Indira Prabhakaran னுடன் பேசிக்கொண்டிருந்த போது சொன்ன விடயம் மனதை மிகவும் கவர்ந்தது. நான்கு பூக்களை கையில் வைத்துக்கொண்டு பேசிய விடயத்தில் நமக்கு எல்லாம் ஏதோ ஒன்று இருப்பதாய் பட்டது. ஆகவே பகிர்கிறேன். அவரின் பார்வையில் இங்கே இருந்து.

Flower No 001:

" எந்த முடிவு எடுக்கும் முன்பும் நம்மை நாம் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி ஒன்று இருக்கிறது. அது யாரோட வாழ்க்கை ? யார் அந்த முடிவை எடுக்க வேண்டும் ? "

இந்த பார்வை மிகவும் முக்கியமானது. இன்று பல முடிவுகளை சம்பந்தப்பட்ட மனிதர்கள் எடுக்காமல் " யாரோ " எடுப்பதுவே பல பிரசச்சினைகளுக்கு காரணம். நீங்கள் அப்படி முடிவினை " யாருக்காகவோ " எடுத்து இருந்தால் அது மிகப்பெரும் தவறு. சம்பந்தப்பட்டவரை அழைத்து அவரையே, அவளையே எடுக்க சொல்லுங்கள்.

Flower no 002 :

" எல்லோருக்கும் இரண்டு வாழ்க்கை இருக்கிறது. ஆனால் இரண்டாம் வாழ்க்கை எப்போது ஆரம்பமாகிறது எனில் " இருப்பது ஒரே வாழ்க்கை " என்று நாம் உணரும்போது.

நம்மில் இன்னும் நிறைய பேர் " இருப்பது ஒரே வாழ்க்கை "என்ற புரிதலுக்கே வரவில்லை. ஆக முதல் வாழ்க்கையை வாழ்வதையே வாழ்க்கை என்று நினைத்து .. ஹ்ம்ம்.

Flower no 003 :

" மகிழ்வாக இருங்கள். மகிழ்ச்சியை பரப்புங்கள் "

ஆம். முதலில் தன் மகிழ்தல் மிக முக்கியம். தன் மகிழ்தல் நடக்கும் பட்சத்தில் பிறர் மகிழ்தல் உடனே நடக்கும். பின் சமூக மகிழ்தல் யதார்த்தமாக மாறும். நீங்கள் மகிழ்வாக வாழ்கிறீர்களா ?

Flower no 004 :

" ஒவ்வொரு நாளும் யாரோ ஒருவரின் வாழ்க்கைக்கு நம்பிக்கை கொடுப்பதை சிறப்பாக செய்ய வேண்டும் "

இன்று நீங்கள் யாருக்கு நம்பிக்கை அளித்தீர்கள் ? யார் உங்களிடம் " நீங்கள் கொடுத்த நம்பிக்கைக்கு நன்றி " என்று சொன்னது ?அல்லது நினைத்தது ? அப்படி ஒரு உணர்வை தினசரி நீங்கள் பெருவீராயின் உங்களின் வாழ்க்கை ஆசீர்வாதம் செய்யப்பட்டது.

இந்திரா வின் பேச்சுகளில் யதார்த்தம் தானாகவே கொடி கட்டி கொள்கிறது. " உண்மைதான் " என்று யோசிக்க வைக்கிறது. அந்த இடத்தை விட்டு இந்திரா நகர்ந்த பின்னும் அவர் கொடுக்க விரும்பும் பூக்களின் மனம் நம் அனைவரையும் அடைகிறது. ஏதோ ஒரு நிறைவு மனதிற்குள் !!




#தீராஉலா : 017

ஆம். ஊர் அப்படித்தான். ஏதாவது சொல்லிக்கொண்டே இருக்கும்.

--------------------------------------------------------------------

" வேலை வெட்டி எல்லாம் இல்லையா ? "

" குடும்பம் இல்லை போல "

" அதெல்லாம் பணம் சம்பாதிக்கும் திமிர் "

" எப்படி இப்படி எல்லாம் சுத்திண்டே இருக்க முடியுது ? "

" மொத்தம் எத்தனை குழந்தைகள் ? "

-------------------------------------------------------------------

ஆனால் அதே உலகம் கேட்க வேண்டிய கேள்விகள் வேறு.

--------------------------------------------------------------------

" எப்படி அத்துணை வேலைக்கும் நடுவில் ? "

" உங்களுக்கு தேவையானதை எப்படி தேர்ந்து எடுத்தீர்கள் ? "

" உழைக்கும் நேரம் கடுமையான உழைப்பு. ரசிக்கும் நேரம் சுதந்திர ரசிப்பு. எப்படி முடிகிறது ? "
" உங்களின் தேடல்கள் எதை நோக்கியவை ? "

" ஒரிடத்தில் settle ஆவது என்ற முடிவை எப்படி உடைத்தீர்கள் ? "

---------------------------------------------------------------

தனி மனித எண்ணங்கள் என்று ஒன்று உண்டு. நம் வாழ்வின் வேர்கள் அவை. அவை அன்றி ஒரு அணுவும் அசையாது. அந்த தனி மனித எண்ணங்கள் நினைத்தால் .. நம்மை உயர் நிலைக்கு கொண்டு செல்ல முடியும். ஆனால் ... அவற்றினை நாம் கூட்டு குடும்பம், குடும்பம், திருமணம், நட்பு, வியாபாரம், சமூக எதிர்பார்ப்பு மற்றும் மரியாதை எல்லாவற்றிலும் தொலைத்து விடுகிறோம்.


கூட்டு குடும்பம் ஆரம்பத்திலேயே சில " emotional links " கொடுத்து தனி மனித எண்ணங்கள் எழும்பாமல் புள்ளி வைக்கிறது. குடும்பம் கதை வேறு. " அவளுக்கு பிடிக்காது " " அவருக்கு பிடிக்காது " என்று இரு வரிகளில் தனி மனித வாழ்வை தொலைத்து வாழ்பவர்கள் ஏராளம். Uniqueness என்று ஒன்றை இன்னும் அழகாக்க வேண்டிய திருமணம், அதை வேறு level uniqueness ஆக மாற்றுகிறது. நட்பில் துரோகம் கலந்து எச்சரிக்கை மனிதனாக மாறும்போது " இதுதான் நான் " சென்று, " இப்படித்தான் இவனுங்க முன்னாள் இருக்கணும் " என்று ஒன்று வந்துவிடுகிறது. வியாபாரம் போல தனி மனித எண்ணங்களை குலைக்கும் ஒன்று இந்த உலகில் இல்லவே இல்லை. வியாபார வளர்ச்சி தனி மனித வளர்ச்சி அல்ல. அது பொருளாதார வளர்ச்சி. அதனால் கிடைக்கும் மரியாதையை தனி மனித வளர்ச்சி என்று எடுத்துக்கொண்டால் .. ? உங்களை பார்த்து பரிதப்பப்பட வேண்டி இருக்கிறது. ( எத்தனையோ வியாபார வளர் மனிதர்கள் சிறு விஷயங்களில் விழுவதை கவனித்து இருக்கிறேன் ! ). சமூக எதிர்பார்ப்பு ? இதுதான் மிகப்பெரிய கொடுமை. ஒருவன் எழவே முடியாமல் போர்வை போட்டு அமுத்தும். அந்த போர்வைக்குள் மூச்சு விட முடியாமல் ஓடி ஒளியும் அவனை அவளை பார்த்தால் பரிதாபமாக இருக்கும். அவன் ஒளிவது போர்வைக்குள் மட்டுமே என்பது தெரியாமல், விளங்காமல் .. அவன் அவள் ஒளிவது போல ஒரு comedy இவ்வுலகில் இல்லை.

" உழைக்கிறேன், சம்பாதிக்கிறேன், நேர்மையாக வாழ்கிறேன். நினைத்ததை செய்து முடிக்கிறேன். நினைத்த இடம் பயணிக்கிறேன். யாரிடமும் எதுவும் வாங்கவில்லை. முடிந்தவரை என் சார் மனிதர்களில்,

தேவைப்படுவோர்க்கு கொடுக்கிறேன். குழந்தைகளை தத்து எடுக்கிறேன். எளியவர்க்கு உதவி செய்கிறேன். பார்க்கும் மனிதர்களிடம் நம்பிக்கை வளர்க்கிறேன். மனம் எளிதாகும் பார்வைகளை அளிக்கிறேன். " என்று உங்களால் சொல்ல முடியுமா ? என்னால் முடியும். ( உங்களால் சொல்ல முடியும் எனில் நாம் ஓர் இனம் ! ) இப்படி நான் சொல்லும்போதே வேறு ஏதோ கேள்விகள் உங்கள் மனதில் ஓடிக்கொண்டிருந்தால் ... ? மேலே உள்ள paragraph ஐ மீண்டும் படிக்கவும்.

( பின்குறிப்பு :

என்னை எங்கும் இட்டு செல்லும் என் வாகனத்திற்கு நான் செலுத்தும் முதல் மரியாதையே இந்த புகைப்படம் !! )







#தீராஉலா : 018

பயம்.

இந்த ஒற்றை புள்ளியில் இருக்கிறது அத்துணை திறமைகள் எழுவதும், வீழ்வதும். விவேகானந்தர் சொன்ன " நீ இருக்கும் வரை இறப்பு வரப்போவதில்லை. இறப்பு வரும்போது நீ இருக்கப்போவதில்லை "என்ற வரிகள் என்னுள் ஏற்படுத்திய தாக்கங்கள் வேறு நிலை. இமயமலையில் 16000 ft trekking முடித்த போதும், 19000 ft இல் வாகனம் ஓட்டியபோதும், காஷ்மீர் நிலநடுக்கத்தின் போதும், நான்கு விபத்துகளின் போதும், தவறாக புரிந்துகொள்ளப்பட்ட போதும் ... பயம் எழுந்து என்னை அதை " இன்னும் சிறப்பாக " செய்ய வைத்ததே தவிர, கீழே இழுத்துவிடவில்லை. என்னை பொறுத்தவரை " பயம் " ஒரு பலம். அது ஏற்படுத்தும் உந்துதல் போல் ஒரு உந்துதல் இல்லை.

மஹாபாலேஸ்வர் இல் இந்த பாறையை அடைய முயற்சித்த போது பயம் வந்தது. அதற்கு இரு காரணங்கள் ..

1. உயரம்.
2. என்னுடன் வந்த நாய் .

உயரம் எப்போதுமே நமக்குள் ஒரு பயத்தை ஏற்படுத்தும். ஏன் அப்படி ஒரு பயம் ? உயரத்தில் இருந்து பார்த்தால் எழும் முதல் கேள்வி .. " கீழே விழுந்தால் என்ன ஆவது ? ". ஆனால் எனக்குள் ஏற்படும் கேள்வி .. " இந்த உயரம் தொட ஏன் இவ்வளவு நாட்கள் ? ஏன் முன்னமே வரவில்லை ?. ". அப்படியானால் இறப்பு பற்றி உங்களுக்கு பயமே இல்லையா ?. என் நேரடி பதில் ... இல்லை. என்னை கவனிக்கும் இயற்கை என்னை " திரும்ப வந்துவிடு " என்று கணக்கை முடிக்கும் இடத்தையும் முடிவு செய்யும். இயற்கையை விட மிகப்பெரியவனா நான் ? அதனிடம் என்னை ஒப்படைக்க தயாராகும் கணத்தில் என் பயம் என்னை விட்டு அகல்கிறது. இந்த முறையும் இயற்கையை உடன் அழைத்து பேசிவிட்டு அங்கே அந்த பாறையில் நின்றேன். காற்று கொஞ்சம் பின்னே தள்ளினாலும், " இது உனக்கான பொழுது " என்று இயற்கை சொல்ல ... கைகள் விரித்து நின்ற போது " பயம் " சொல்லிக்கொள்ளாமல் வெளியேறியது. சிரிப்பு உள்ளுக்குள் இடம் பிடித்தது.

உடன் வந்த நாய் ஒரு புது அனுபவம். ஆச்சர்யமாக இந்த பாறை நோக்கி ஏறும்போது அது உடன் வந்தது. நாய் என்னை பொறுத்தவரை ஒரு குறியீடு. அது ஏன் இங்கே வருகிறது ? என்கிற கேள்வி என்னுள் எழுந்தாலும், வரட்டும் என்கிற பதில் உள்ளே எழ நான் பாறை நோக்கி நடக்க, அது எனக்கு முன்னே முன்னேற .. ஏதோ ஒரு சமிக்ஞை எனக்கு கிடைத்தாற்போல் உள்ளுக்குள் ஒரு மின்னல். " வா நான் இருக்கிறேன் " என்று பேசியது போல நின்ற நாயை கவனிக்கிறேன். கொஞ்ச நேரம் கழித்து அது அந்த இடத்தை விட்டு அகன்று சென்றது. அதற்குள் நான் அந்த பாறைக்கு பழக்கமான மனிதனாக நின்றிருந்தேன். ( எனக்கு பாறையுடன் அந்த பழக்கத்தை ஏற்படுத்ததான் வந்ததோ ? ). நாயற்ற பாறையில், தைரியம் பெற்ற மனிதனாக, கைகள் விரித்து நின்ற அனுபவம் போல வருமா ?
எனக்குப்பின் அந்த பாறை ஒவ்வொருவராக பழக ஆரம்பித்தது. ( எனக்கு முன்னும் மனிதர்கள் பயணித்து இருக்கலாம் ! ). அப்போதும் அந்த நாய் வந்து நின்று பின் சென்றது. இயற்கை பேசும் முறைகளை என்னவென்று வர்ணிப்பது ?

பயம் வரும்போதேல்லாம் கூடவே சில சமிக்ஞைகளும் நம்மை நோக்கி வரும். அவற்றை கவனித்தால், பயம் நம் பலமாக மாறும். கவனிக்க மறந்தால், நான்கு படிக்கட்டுகள் கொண்ட மேடை ஏற கூட பயப்படும் மனிதனாக நாம் மாறிப்போவோம் !!

பயணிப்போம். பகிர்வோம்.

#தீராஉலா : 019

Karpagaraajen Thiyagarajan :

ஒரு 5 மணி நேரம் அளவிற்கு, ஆங்காங்கே இடைவெளியுடன் சிரித்து கொண்டே இருக்க முடியுமா ?

எப்போதும் active ஆக ஒரு excellence ஐ ஜே
காண வேண்டுமா ?

உதவி என்றால் முன் வந்து நிற்கும் ஆளுமையை கவனிக்க வேண்டுமா ?

தன்னை தானே " கலாய்த்து " அதில் மற்றவர்களையும் சிரிக்க வைத்து நகரும் ஆளுமையின் அருகாமை வேண்டுமா ?

அத்தனையும் சேர்ந்து தான் கற்பகா. ஏற்காட்டில் அவரின் உதவி எல்லோருக்கும் புரிந்திருக்கும். இந்த பயணத்தில் ? மூவருக்கு மட்டுமே புரியும் என்பதால் இங்கு பகிர தோன்றுகிறது.

வாழ்க்கையில் யாருக்கு தான் கடின நேரங்கள் இல்லை. ஆனால் அதை யார் எப்படி கடக்கிறார்கள் என்பதில் இருக்கிறது நம் பாடம். கற்பகா வின் கடின நேரங்கள் வெளியே சொல்ல முடியாத வலி கொணர்பவை. ஆனாலும் .. அவர் அதை Present tense இல் கடக்கிறார். யாரிடமும் கடந்த, கசந்த காலத்தை அவர் சொல்வதில்லை. ஆனால் மற்றவரகளை கசந்த, கடந்த, கால நினைவுகளில் இருந்து நகைச்சுவை மூலம் மீட்டு அவர்களை அவர்களிடமே கொடுக்கிறார். பின் எதுவும் நடக்காதது போல வெளியேறுகிறார். அவர் சொல்லும் .. " எல்லோரும் இருக்கும் போது நாம தெரியக்கூடாது. நாம இல்லாத போது நம்மை எல்லோரும் உணரனும் " என்ற வரிக்கு அவரே சொந்தக்காரர்.

புகைப்படங்கள் இவரின் இன்னொரு உலகம். இந்த முறை என்னை எடுத்த படங்கள் அனைத்தும் அவருடயதே. அந்த திறமையும் விரைவில் இன்னொரு மேடை காணும் என நம்புகிறேன்.

Rathinavelu Muthusubramanian :

முத்தண்ணா என்ற வார்த்தைக்கு சொந்தக்காரர். இந்த பயணத்தின் மொத்த drive ம் அவரே செய்தார். இயல்பான drive. பாதுகாப்பு உணர்வுடன் அருகில் அமர்ந்து பயணிக்கலாம். அவ்வளவு safe drive.

மௌனம் அவரின் பலம். மசாய் புல்வெளியில் அவரின் தியான உணர்வும், தியானமும், அங்கே இருந்த நீர்நிலைக்கு அருகில் அவரின் மௌன அமர்வும் ... பக்குவப்பட்ட மனநிலையின் இன்னொரு அடையாளங்கள். இளையராஜா அவரின் சங்கீத குரு. பாடல்கள் நிறைய அவர் வசம். கேட்கும் பாடல்கள் அனைத்திலும் அவரின் ஈடுபாடு ஆச்சர்ய ஆனால் ராஜாவின் ரசிகர்களுக்கு யதார்த்தமானது.

Drive ஒரு zen நிலையிலேயே இருக்கிறது. அதிர்வுகள் இல்லை. வேகம் இல்லை. Racing இல்லை. வீட்டின் அறையில் அமர்ந்து பேசிக்கொண்ட உணர்வு. ஆங்காங்கே Break. ஆங்காங்கே சுவை உணவு கடை குறிப்புகள். பயணத்தில் கூட வரவேண்டிய ஆளுமை.

இன்னொரு உயரம் அவரை விரைவில் அடையும். நாட்கள் அருகில். நிச்சயம் திறமை உயரும். வாழ்த்துக்கள்.

பயணிப்போம். பகிர்வோம்.




#தீராஉலா : 020

அந்த புல்வெளி அமைதியாய் நிற்கிறது. புல்வெளிகள் அப்படித்தான். அவை அமைதியாகத்தான் இருக்கும். ஆர்ப்பாட்ட புல்வெளி எங்கேயும் பார்க்க முடிவதில்லை. புல்வெளி எனில் அமைதி. புல்வெளிகளின் அமைதி அவற்றுக்கு மட்டும் இல்லை. அங்கே வரும் அனைவருக்கும். வாகனங்களும் இங்கே அமைதியாவது, ஆச்சர்யங்களின் முதல் புள்ளி !

2300 Kilometer பயணம். நான்கு ஆளுமைகள். இளையராஜா. புகைப்படம். உணவு. தூக்கம். விழிப்பு. சூரிய உதயம். சூரிய அஸ்தமனம். டீ. காபி. கருப்பு காபி ( சக்கரை இல்லாமல் ). தங்கும் அறை. Reception. Wifi. Cellphone. புகைப்படம் பகிர்தல். Fb. Whatsapp. Google Drive. சுடு நீர் குளியல். தூக்கம். விழிப்பு. புதிய உலகம். இவை அனைத்தும் குறிப்பாக சிரிப்புடன். முகமூடியற்று. அவர்கள் அவர்களாக. பயணம் முழுதும் மீண்டும் மீண்டும் கேட்ட பாடல் .. " எங்கெங்கோ செல்லும் என் எண்ணங்கள் " ! எண்ணங்களின் உற்சாக திருவிழா.

பரந்த புல்வெளி ஒன்றில் நால்வரும் காணாது போனோம். ஒரு மூலையில் ஒருவர் புகைப்படம் எடுக்க, ஒருவர் நடக்க ஆரம்பிக்க, ஒரு நீர்நிலை முன் அமர, ஒருவர் தியானத்தில். " எவ்வளவு வேண்டுமோ எடுத்துக்கொள் " என்று தன்னை அகலமாய் வைத்து சொல்லும் புல்வெளியில் .. negligible புள்ளிகலாய் அவர்கள் நாள்வரும் தொலைய .. இருள் வந்து அவர்களை மீட்டது. வெளிச்சத்தில் தொலைந்து இருளில் மீண்டவர்கள் அவர்கள். வாழ்க்கையிலும் !!

வாகனம் பொதுவாக ஒரு Witness. நடப்பதை, பேசுவதை, பாடுவதை, மௌனமாக இருப்பதை .. கவனித்து கொண்டே இருக்கும் வெண் தோல் போர்த்திய உயிர் அது. இயக்கம் வெளியே. குளிருடன் அமைதி உள்ளே என்று நகரும் அதன் பக்கங்களில் அந்த நால்வரும் எழுத்துக்கள். பக்கங்கள் முடிவதில்லை.

தீரா உலா என்னைப்பொறுத்தவரை முக்கியமான பதிவு. தனித்தன்மையுடன் பயணிக்கும் நால்வருக்கு இடையில் ... கேள்வி அற்ற புரிதலில் நகரும் நாட்களை முழுக்க புசித்த பதிவு என்று ஒன்று உண்டு எனில் அது தீரா உலாவிற்கு பொருந்தும்.

அடுத்த தீரா உலாவில் மீண்டும் சந்திப்போம்